செ.வெ.எண்: 705.    நாள்: 01/12/2011.

# பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர், திருமதி செல்வி இராமஜெயம், அவர்கள் இன்று 30.11.2011 (புதன்கிழமை) காலை 11.00 மணி அளவில் சமூகபாதுகாப்புத் துறையின் கீழ் சென்னை சாந்தோமில் செயல்படும் அரசினர் மகளிர் பாதுகாப்பு இல்லத்தை திடிரென ஆய்வு மேற்கொண்டார்கள். இவ்வில்லத்தில் மொத்தம் 80 பேர் பாலியில் தொழில் ஈடுபட்டு நீதி மன்ற வழக்கை சந்திக்கும் பெண்கள் தங்கி உள்ளனர். இவ்வில்லத்தில் தங்கியுள்ள பெண்கள் தங்களின் குறைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்கள். இவ்வில்லத்தில் தமிழ்நாடு உட்பட பல்வேறு மாநிலங்களை சேர்ந்த பெண்கள் தங்கியுள்ளனர். அவர்கள் பாலியில் தொழிலிருந்து விடுப்பட்டு குடும்ப வாழ்க்கை வாழ்வதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொண்டுள்ளனர். மாண்புமிகு அமைச்சர் அவர்க உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதி அளித்தார்கள்.

மேலும், அப்பெண்கள் சுயதொழிலில் ஈடுபட அவர்களுக்கு தொழில் பயிற்சிகள் வழங்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவ்ாகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதன்பேரில், உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள்.

இவ்வில்லத்தில் தங்கியுள்ள பெண்கள் பொருளாதாரம் மற்றும் சமுதாயத்தில் உரிய அங்கீகாரம் கிடைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அறிவுரை வழங்கினார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9